| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராம வர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை - 600 006. | 1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள். |

**ந.க.எண். 007014 /எப்.1/2023** **நாள் : 19 .05. 2023**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 – 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – மார்ச்/ஏப்ரல் 2023, தேர்வு முடிவுகள் - அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியல் (TML) - அனைத்துப் பள்ளிகளும் ஆன்-லைன் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்வது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (நிலை) எண். 14, நாள். 29.01.2018.

-----

2022 -2023 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களின் பொதுத் தேர்வு முடிவுகள் 19 .05.2023 ( **வெள்ளிக் கிழமை) அன்று பிற்பகல் 02.00 மணிக்கு** வெளியிடப்பட்டது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களும் 19 .05.2023 **அன்று பிற்பகல் 03.00 மணி முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, தங்கள் பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User-ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்துமாறும், அதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பள்ளித் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஒம்/-**

**இயக்குநர்**

**நகல்**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.